*Crl.M.P. No.2114 of 2025*

**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.</u>**

முன்னிலை : திரு.P.ஆசைமருது பி,ஏ., எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ), தேனி.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

<u>Crl.M.P. No.2114/2025</u>

**<u>CNR No. TNTH02-003395-2025</u>**

A.நாகராஜன் (வயது 78)
த.பெ. ஆவுடையப்பன்,
3–1–54 முல்லைநகர்,
முதல்நகர் பழனிசெட்டிபட்டி, தேனிமாவட்டம். ...மனுதாரர்

**..Vs..**

1. V. முருகன்,
வீரபாலாஜி நகர் 5 வது தெரு,
வார்ட்டர் டேங்க் எதிர்புரம்,
பழனிசெட்டிபட்டி, தேனி வட்டம், தேனி மாவட்டம்.

2. M. சுமதி,
வீரபாலாஜி நகர் 5 வது தெரு,
வார்ட்டர் டேங்க் எதிர்புரம்,
பழனிசெட்டிபட்டி, தேனி வட்டம், தேனி மாவட்டம்.

3. M.ரிஷிகேஷி,
வீரபாலாஜி நகர் 5 வது தெரு,
வார்ட்டர் டேங்க் எதிர்புரம்,
பழனிசெட்டிபட்டி, தேனி வட்டம், தேனி மாவட்டம்.

...எதிர்மனுதாரர்கள்

இவ்வுத்தரவானது 09.02.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.M. சேவியர் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம்

வழங்கிடும்...

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரரால் பிரிவு 156(3) Cr.P.C (தற்போதைய 175(3) BNSS-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

(i) மனுதாரர் தரப்பில், கடந்த 26.08.2024-ம் தேதி திரு. முருகன், மற்றும் அவரது மனைவி அவரது மகன் ஆகிய நபர்கள் தீய உள்நோக்கத்துடன் டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்ட அட்டைகள் மற்றும் தகவல் குறுஞ்செய்தி மற்றும் குறுந்தகவல்களை கொண்டு மனுதாரரையும் மனுதாரின் குடும்பத்தினர்களை அணுகி மேற்படி 1 வது எதிரி மூன்று நிறுவனங்களில் முகவர், பிரதிநிதி மற்றும் ஏற்பாட்டாளராக இருப்பதாக கூறி அதற்குண்டான சகலவிதமான சான்றுகளையும் காண்பித்தும் மனுதாரரை நம்ப வைத்து மேலும் மனுதாரரின் வீட்டில் நிறுவன சேமிப்பு கிட்டங்கி வைப்பதற்காக ஒரு பகுதியினை வாடகைக்கு விட்டு வந்த நிலையில் எதிரிகள் தீய உள்நோக்கத்துடன் மனுதாரரின் இறுதிக்கால சேமிப்பு மற்றும் வைப்புகளை அபகரிக்கும் நோக்கத்துடன் பல்வேறு காரணங்களை சொல்லி மனுதாரருடைய அறிவுக்கு அப்பாற்பட்டும் மனுதாரருடைய அணுகும் எல்லைக்கு மீறியும் பல தகவல்களை தொடர்பு மற்றும் இணைய வழி மூலம் சொல்லி மனுதாரருக்கும், மனுதாரின் குடும்பத்தாருக்கும் மேற்படி நிறுவனங்களிலிருந்து முகமை மற்றும் கூட்டாண்மை உரிமை பெற்றுத் தருவதாக மனுதாரரை பொய்யாக நம்ப வைத்து அதற்கு அவ்வப்போது மனுதாரரின் குடும்பத்தினரிடமிருந்து பல்வேறு தேதிகளில் சுமார் ரூ.15,00,000/- வரை மோசடியாக எதிரிகள் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றும்,

(ii) மேலும் Classic Polo Show Room, Darling Masala Dealership எடுக்கவேண்டும் என்றும், மேலும் சதுரகிரி Snacks Dealership எடுக்க வேண்டும் என்றும், Aloe Fruit Energy Drinks Dealership எடுக்க வேண்டும் என்றும், மனுதாரரிடம் நேரடியாக கையில் பல்வேறு தேதிகளில் சுமார் ரூ.6,70,000/- ரொக்கமாக பெற்றுக் கொண்டார்கள் என்றும், மற்றும்

மனுதாரரின் மகன் வங்கி கணக்கின் மூலமாகவும், போன் மூலமாகவும் இன்னும் பிற நபர்கள் ஏலச்சீட்டின் மூலம் ரூ4,80,000/-மும் மற்றும் எதிரிகள் கம்பெனிகளுக்கு வங்கி கணக்கின் மூலமாகவும், மனுதாரர் அனுப்பியுள்ளதாகவும், மேலும், மனுதாரரின் மகனின் Credit Card மூலமாக மேலும் பொருட்கள் வாங்கிய வகையிலும் மோசடி செய்துள்ளதாகவும், இவை அனைத்திற்கும் முறையான ஆன்லைன் பரிவர்த்தனை ஆவணங்கள் உள்ளதாகவும், மனுதாரரிடம் கையில் நேரடியாக எதிரிகள் வாங்கிய ரூ.6,70,000/- மற்றும் மனுதாரரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் மேல்புறத்தில் உள்ள பகுதியை எதிரியின் வியாபாரத்திற்காக வேண்டுமென்றும், மற்றும் GST எடுப்பதற்கும் ஒரு வாடகை ஒப்பந்தம் வேண்டுமென்றும் மனுதாரரிடம் ஒரு போலியான வாடகை ஒப்பந்தத்தையும் பெற்றுக் கொண்டு, அதில் மனுதாரர் பெறாத அட்வான்ஸ் தொகையினையும், வாடகையினையும் பூர்த்தி செய்து மனுதாரரிடம் நம்பிக்கையாக பேசி நயவஞ்சகமாக கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், மேலும் மனுதாரரின் வியாபார நடவடிக்கைக்காக மேற்படி வீட்டின் மின் இணைப்பை வர்த்தக பயன்பாட்டு மின் அளவீட்டாக மாற்றிக் கொண்டதாகவும், கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்து எதிரிகளால் ஏற்படுத்தி தரப்பட்ட மனுதாரரால் பொறுப்பேற்கப்பட்ட கடன் அட்டை மற்றும் டிஜிட்டல் தொடர்பான பரிவர்த்தனைகளில் உள்ள வில்லங்க விவாகரங்களினால் மனுதாரருக்கும், மனுதாரரின் குடும்ப உறுப்பினர்களும் நிம்மதியிழந்து செய்வதறியாமல் திகைத்து நின்றதாகவும், மேற்படி மனுதாரரின் உறவினர் உதவி மூலம் பழனிசெட்டிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனுவாக தாக்கல் செய்யப்பட்டு மனு விசாரணையில் நிலுவையிலிருந்து வருவதாகவும்,

(iii) கடந்த 08.02.2025 முதல் 20.05.2025 வரை சுமார் 10க்கும் மேற்பட்ட விசாரணை நிகழ்வுகளை மனுதாரரை விசாரித்தும், எதிரிகளை விசாரணைக்கு அழைத்தபோது, எதிரி முருகன் மற்றும் அவரது மனைவி சுமதி மட்டும் ஆஜராகி உண்மைக்கு புறம்பான விஷயங்களை சொல்லி வீண் காலதாமதம் செய்து வந்தும் மேலும் மனுதாரரையும் மனுதாரரின் மகனையும், மனுதாரரின் குடும்பத்தாரையும்,

ஏமாற்றும் எண்ணத்துடன் மீண்டும் மோசடி செய்யும் எண்ணத்துடனும், வெளியில் வைத்து பேசிக் கொள்ளலாம் என்று அழைத்து பேசி அதில் எதிரிகள் ரூ.9,50,000/– பல்வேறு தேதிகளில் தர ஒப்புக் கொண்டு முதல் இரண்டு தவணைகளாக தலா ரூ.50,000/– என்றும், பின் தேதிகளில் மீதம் தருவதாகவும் கூறி 2 வது தவணை ரூ.50,000/–கொடுக்கும்போது மனுதாரரிடம் நயவஞ்சகமாக பெற்றுக் கொண்ட மனுதாரரின் வீட்டின் மேல்பகுதியில் உள்ள பொருட்களை திரும்ப எதிரிகள் எடுத்துக் கொண்டு பொய்யாக எழுதப்பட்ட வாடகை ஒப்பந்தத்தையும், மனுதாரின் வீட்டு வரி ரசீதையும் ஒப்படைக்க வேண்டும் என்றும், அதில் குறிப்பிட்டு இருந்ததாகவும், இந்நிலையில் மேற்படி எதிரிகள் மனுதாரரை மோசடி செய்யும் எண்ணத்துடன் ரூ.50,000/–தரும்போது ரூபாயையும் மட்டும் கொடுத்து விட்டு வீட்டினை 2 நாட்களில் பொருட்களை காலி செய்து மனுதாரரிடம் முறையாக வீட்டின் சாவி மற்றும் வாடகை ஒப்பந்தம் வீட்டு வரி ரசீது தருகிறோம் என்று சொல்லி சென்றதாகவும், மனுதாரரும் அதனை நம்பி இருந்ததாகவும்,

(iv) எதிரிகள் ரூ.9,50,000/–எழுதிய பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரண்டு மூன்று காப்பிகளில் மனுதாரரிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டதாகவும், இந்நிலையில் வீட்டினை காலி செய்வதற்கு மனுதாரர் அவர்களை அணுகியபோது அவர்கள் முறையான பதில் அளிக்காமல் மனுதாரரை மீண்டும் மோசடி செய்யும் எண்ணத்துடன் " உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றும், அதன்பின்பு மேற்படி பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 24.04.2025–ம் தேதி எழுதியது அதன் 100 ரூபாய் பத்திரத்தை 25.04.2025 மனுதாரர் மற்றும் எதிரி முருகன் பெயரில் கூட்டாக வாங்கியது போன்று தயார் செய்துள்ளதாகவும், மேற்படி போடிநாயக்கனூரைச் சேர்ந்த ஸ்டாம்ப் வெண்டர் திரு. K.சந்தன பீர் ஒலி என்பவரை மனுதாரருக்கு யார் என்றே தெரியாது என்றும், இதிலும் மனுதாரரையும் மோசடி செய்துள்ளதாகவும், மனுதாரரைப் போன்றே பல நபர்களை இவ்வாறு மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் மேற்படி முருகன் ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களும் இவராலும், இவரது குடும்பத்தாராலும் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவருக்கும் இவரது

குடும்பத்தாருக்கும் இதுபோன்ற செயல்களை செய்வது வாடிக்கையாக கொண்டுள்ளனர் என்றும், எனவே. மனுதாரர் வேறு வழியின்றி கடந்த 26.08.2024 அன்று தான் அளித்த புகாரின் பெயரில் உரிய சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவும் குற்ற வழக்கு பதிவு செய்யவும் அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு இம்மேன்மைமிகு நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவும் வேண்டுமாய் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர் மனு அனுமதிக்கப்படத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**4.** மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் பார்த்ததில் மனுதாரர் இந்த மனு சம்பந்தமாக பிசிபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து புகார் மனுவின் ரசீது எண்33/2025 கொடுத்துள்ளது தெரியவருகிறது மேலும் அதனை தொடர்ந்து மனுதாரர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து கொடுத்த அறிவிப்பு மற்றும் மனு சார்வு செய்யப்பட்டதற்காகன அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவில் உள்ள சங்கதிகளை ஆராய்ந்து பார்க்கையில் மனுதார் தனது மனுவில் கூறியுள்ள செயல்கள் முதல்நோக்கில் நடந்திருக்க வாய்ப்பு உள்ளதாகவே தெரிய வருகிறது. மேலும் மனுதார் அளித்த தகவல்படி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக காவல்துறை தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் தெரிய வருகிறது.

5. எனவே, **இவ்வுத்தரவு கிடைத்த மூன்று மாத காலத்திற்குள் பழனிச்செட்டிப்பட்டி காவல் ஆய்வாளர் அவர்கள் மனுதாரின் புகார் மனுவின்பேரில் முன் விசாரணை மேற்கொண்டும், தகுந்த முகாந்திரம் இருக்கும்பட்சத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், அதுபற்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை அவ்வப்போது இந்நீதிமன்றத்திற்கு காலதாமதமின்றி**

**அனுப்பி வைக்க வேண்டும்** என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக, மனுதாரரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் நேரடியாகச் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து – தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டடது.

AASAY MARUDHU P
Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.13 17:36:13 +0530

**நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),**
**தேனி.**

**<u>இணைப்பு:</u>**

1. பழனிசெட்டிபட்டி காவல் நிலைய CSR எண்.33/2025 நகல் மற்றும் நகல்.

2. 08.02.2025 அன்று பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு நகல்.